தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண். 150/2025 நாள்: 05.11.2025

**செய்திக் குறிப்பு**

**ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு பதவிகள்)**

**(அறிவிக்கை எண்.08/2025)**

**கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்புக்கான பட்டியல் வெளியீடு**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு பதவிகள்)–இல் உள்ள பதவிகளின் நேரடி நியமனத்திற்காக 07.05.2025 அன்று அறிவிக்கை வெளியிட்டது. இத்தெரிவிற்கான தேர்வுகள் 20.07.2025 முதல் 22.07.2025 மு.ப. மற்றும் பி.ப. வரை நடைபெற்றது. இத்தேர்விற்கு 14,177 தேர்வர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். மேற்படி தேர்வினை 6,308 தேர்வர்கள் எழுதினர்.

**இத்தெரிவிற்கான தேர்வு முடிவுகள் நவம்பர் மாதம் 2025–இல் வெளியிடப்படும் என தேர்வாணைய வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே, மேற்கண்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்புக்கு தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட 1,236 தேர்வர்களின் பதிவெண் கொண்ட பட்டியல் தேர்வாணைய வலைதளத்தில் (www.tnpsc.gov.in) 05.11.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது.**

தேர்வர்கள், தேர்வாணைய இணையதளத்தினை (www.tnpsc.gov.in) தொடர்ந்து பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,**
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்